


# 22 இடம் பொருள் கலைஞர்

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்த இந்தப் பகுதியில் இந்த வாரம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு வாரியம்....**





## தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்!

## லட்சம் வீடுகள் என்ற இடையறாத லட்சியம்!

*"ஓர் இந்துக்கு கோயிலைக் காண்கிற நேரத்தில் ஏற்படுகிற உணர்ச்சி; ஒரு முஸ்லிமுக்கு மசூதியைக் காண்கிற நேரத்தில் ஏற்படுகிற உணர்ச்சி; ஒரு கிருத்துவருக்கு தேவாலயத்தைப் பார்க்கிற நேரத்தில் ஏற்படுகிற உணர்ச்சி; ஒரு ரசிகனுக்கு தாஜ்மகாலைக் காணுகிற நேரத்தில் ஏற்படுகிற உணர்ச்சி... எனக்கு இந்த ஆதி திராவிடர் மாணவர் இல்லத்தைக் காணும் நேரத்தில் ஏற்படுகிறது."*

1974 மே மாதம், தமிழ்நாடு அரசின் ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் நீலகிரி மாவட்டக் கிளை தொடக்க விழாவில் இவ்வாறு பேசினார் முத்தமிழறிஞர் கலைஞர். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை வறுமைக் கோட்டுக்கு மேல் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்துடன் 1974 பிப்ரவரி 15 ஆம் தேதி தொடங்கப்பட்டது அந்தக் கழகம். அதுதான் பின்னாளில் 'தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்' (தாட்கோ) ஆனது.

தொடக்கத்தில் வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு இலவச, தீப்பிடிக்காத வீடுகளை இக்கழகத்தின் கட்டுமானப் பிரிவு கட்டிக் கொடுத்தது. பின்னர், தொழில் முனைவு மற்றும் திறன் மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டங்களுக்கான நிதியுதவியை மேம்படுத்துவதன் மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார வளத்தினை உயர்த்துவதற்கான பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் இக்கழகத்தின் செயல்பாடுகள் இன்று விரிவடைந்துள்ளன.

### ஆதிதிராவிடர்களுக்காக இந்தியாவிலேயே முதல்!

பல ஆண்டுகளாக மண் சுவரும், ஓலைக் கூரையும் கொண்ட குடிசைகளில் வாழ்ந்து வந்த ஆதிதிராவிட சமுதாய மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்து அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அடித்தளம் அமைக்கும் புரட்சிகரமான திட்டத்தை இந்தியா விலேயே முதன் முதலில் தமிழ்நாடுதான் மேற்கொண்டது. அது நம் கலைஞர் அரசால் சாத்தியமானது!

அந்தக் கழகத்தின் மூலம் 1974 - 1975 இடையிலான ஒரே ஆண்டில், 30 ஆயிரத்து 22 வீடுகள் கட்டித் தரப்பட்டன. ஆனால் அதற்குப் பின் வந்த அ.தி.மு.க. அரசு, தனது ஆட்சிக் காலம் முழுவதிலும் கட்டிய மொத்த வீடுகளின் எண்ணிக்கை வெறும் 36 ஆயிரத்து 261 மட்டுமே. கலைஞர் கொண்டு வந்த இந்தத் திட்டம்தான் பின்னர் 'இந்திரா வீட்டு வசதித் திட்டம்' என்று 1985ல் ஒன்றிய அரசால் ஏற்கப்பட்டு, நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது என்கிறார், 'கலைஞர் செதுக்கிய தமிழகம்' எனும் நூலின் ஆசிரியர் புலவர் முத்து வாவாசி.

**மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு உண்மையான விசுவாசத்துடன் தமிழக அரசு பணியாற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.**

"ஓட்டு வீடுகளாக கட்டப்பட்டு வந்த தொகுப்பு வீடுகள் திட்டத்துக்கு 1989ல் அமைந்த கலைஞர் அரசு, 4 ஆயிரம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து கான்கிரீட் வீடுகள் கட்ட ஆணையிட்டது. கலைஞர் அரசு இத்திட்டத்துக்கு 1998ல் ஒதுக்கிய கூடுதல் நிதி 12 ஆயிரம் ரூபாய். இதனை 2001ல் அமைந்த அ.தி.மு.க. அரசு 9 ஆயிரம் ரூபாய் எனக் குறைத்தது. 2006ல் அமைந்த கலைஞர் அரசு மீண்டும்12 ஆயிரம் ரூபாய் என அத்தொகையை உயர்த்தியது" என்கிறார் அவர்.

### 'செயல்படுகின்ற கழகம்!'

'ஓர் அரசு, மக்களிடம் வாங்குகிற வரிகளின் மூலம் மக்களுக்குப் பல காரியங்களைச் செய்கிறது. வரவு செலவுத் திட்டம் போடுகிற நேரத்தில் வழக்கமாக மக்களுக்குச் செய்யப்படுகிற காரியங்களைச் செய்கிறது. இப்படி வழக்கமாகச் செய்யப்படுகிற காரியங்களை ஓர் அரசு வரிப் பணத்தின் மூலம் செய்யலாம். ஆனால் அந்த வருமானம் போதாமல் போனால், சில சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலமும் நிறைவேற்றலாம்' என்று நீலகிரியில் நடைபெற்ற விழாவில் சொன்ன கலைஞர், மிக முக்கியமான விஷயத்தைக் கவனப்படுத்தினார்.

"கருணாநிதி பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். ஆகவே ஆதி திராவிடர்களைவிட அவர் பின் தங்கிய மக்களுக்குத்தான் அதிகம் செய்கிறார் என்பதற்கு ஆதாரம் இல்லை என்பதற்கு இது ஒரு நல்ல சாட்சியமாகும்! இந்தியாவில் நம் மாநிலத்தில் ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டக் கழகம் ஒன்றை அமைத்து செயல்படுத்தி வருகிறோம். வேறு மாநிலங்களில் இதுபோல் ஒருவேளை இருக்கக் கூடும். ஆனால் இங்கே 'செயல்படுகின்ற கழகமாக' அது இருந்து வருகிறது" என்றார்.

### 'விசுவாசமிக்க மக்கள் அரசு!'

ஒன்றிய அரசின் உணவு அமைச்சராகத் திகழ்ந்த, ஆதிதிராவிட சமுதாயத்தின் மதிப்பு வாய்ந்த தலைவராக விளங்கிய பாபு ஜகஜீவன்ராம், 1975 ஜனவரியில், செங்கல்பட்டு மாவட்டம் காட்டுப்பாக்கத்தில் ஆதிதிராவிடர் இலவச வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில் கட்டப்பட்டிருந்த குடியிருப்புகளைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

அப்போது அவர், "மக்கள் நல அரசை, ஆட்சியை நாம் நடத்துகிறோம் என்றுதான் இந்தியாவில் கூறிவருகிறோம். மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு உண்மையான விசுவாசத்துடன் தமிழக அரசு பணியாற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். வாடகை எதுவும் இல்லாமல் இலவசமாக இந்த வீடுகளை ஆதி திராவிடர் சகோதரர்களுக்கு வழங்குவது என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் முடிவு செய்திருப்பது அவருடைய சீரிய மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழ்நாடு காட்டியுள்ள இந்தச் சிறந்த முன் உதாரணத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்ற முயல வேண்டும் என்று நம்புவோமாக!" என்று கலைஞரைப் பாராட்டினார்.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்டபோது, '10 லட்சம் வீடுகள் ஆதி திராவிடர் மக்களுக்காகக் கட்டப்பட வேண்டும்' என்கிற கனவு கலைஞரிடம் இருந்தது. அதற்கு மேலும் வீடுகள் கட்டப்பட வேண்டுமானாலும்கூட, இன்று நம் கழகத் தலைவர் முதலமைச்சரின் ஆட்சியால் முடியும். அந்த நிம்மதியுடன், காற்றோட்டமும் தூய்மையும் நிறைந்த அந்த வீடுகளில் கலைஞர் கலந்திருப்பார்!

**...வலம் வருவோம்**

## வேரை அரிக்கும் கறையான்கள்!



உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவை, 'ஜனநாயகமற்ற நாடு' என்கிற தோற்றத்தை உருவாக்கி வருகிறது ஒன்றிய பாஜக அரசு. சர்வதேச அரங்கில் பெருமை தேடித் தந்த விளையாட்டு வீரர்களை, கொடும் குற்றவாளிகளைப் போல கைது செய்து தலைகுனிவை உருவாக்கினர். பன்முக கலாச்சாரம் கொண்ட இந்திய நாடாளுமன்ற மரபை, புராண ஓவியங்கள், செங்கோல் என ஒற்றைக் கலாச்சார அடையாளமாக்க முனைகின்றனர். அந்த வரிசையில், டிவிட்டர் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஜாக் டோர்சியின் சமீபத்திய குற்றச்சாட்டு, ஒன்றிய அரசின் முகத்திரையை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது.

2020-21 ஆம் ஆண்டில் வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் என, டெல்லியை முற்றுகையிட்டு ஓராண்டு காலத்துக்கும் மேல் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, விவசாயப் போராட்டங்கள் தொடர்பான செய்திகளை இருட்டடிப்பு செய்யுமாறு டிவிட்டர் நிறுவனத்திடம் ஒன்றிய அரசு வலியுறுத்தி உள்ளது. ஊழியர்களை அச்சுறுத்திப் பணிய வைப்போம் என்று மிரட்டியதாகவும், ஜார் டோர்சி தெரிவித்துள்ளார். அவரது கருத்து உலக அரங்கில் இந்தியாவுக்குத் தலைகுனிவை உருவாக்கியுள்ளது. நமது பல ஆண்டுகால பெருமிதங்களை ஒன்றிய அரசு சிதைத்துக் கொண்டிருக்கிறது. ஜனநாயக நாட்டின் அடித்தளத்தை வேரை அரிக்கும் கறையான்போல சிதைத்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் விழித்துக் கொண்டிருக்கின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



### மாநாட்டுக் கண்காட்சி!



சுந்தரம்

திராவிட இயக்க வரலாற்றுக் கண்காட்சி, 1990 - ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற திருச்சி மாநில மாநாட்டின் ஒரு பகுதியாகத் திட்டமிடப்பட்டது. அதற்காகப் பொள்ளாச்சி மா. உமாபதி தலைமையில், ஒரு குழு அமைக்கப்பட்டு, சென்னை அன்பகத்தில் கண்காட்சிப் பொருட்கள், ஓவியங்கள் ஆகியவை தயாரிக்கப்பட்டன. தலைவர் கலைஞருக்கு இக்கண்காட்சியின் முன்னோட்டத்தை அறிவாலயத்தில் காண்பித்தோம். இன்றைய முதலமைச்சர் தலைமையிலான இளைஞர் அணியின் முன்னெடுப்பைப் பாராட்டி வாழ்த்தினார் கலைஞர். அப்போது எடுத்துக் கொண்ட புகைப்படம் இது. மாநாட்டில் இக்கண்காட்சியை கலைஞரே திறந்து வைத்தார். பின்னாட்களில் அறிவாலயத்தில் அமைக்கப்பட்ட 'கலைஞர் கருவூலம்' காட்சியகத்துக்கு இளைஞர் அணியின் இந்த முன்னெடுப்பே தொடக்கப் புள்ளியாக அமைந்தது.

**-தடா ஓ.சுந்தரம்,**
**தலைமைக் கழகப் பேச்சாளர், சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகக் குடும்பம்!

**1966-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் திண்டிவனத்தில், தேர்தல் நிதி திரட்டுவதற்காக கலைஞரின் 'காகிதப் பூ' நாடகம் நடைபெற்றது. அன்றைய நிகழ்ச்சியின்போது கலைஞருடன் குடும்பத்தினரும் வந்திருந்தனர். நிகழ்ச்சியை முடித்து விட்டு, சென்னை திரும்பும் வழியில், மதுராந்தகம் அருகே கடும் சூறைக்காற்று, புயலில் குடும்பத்தினருடன் சிக்கிக் கொண்டார் கலைஞர். மரங்கள் விழுந்து கார் நகர முடியாத நிலையில், அருகிலிருந்த கருங்குழி பயணிகள் விடுதியில் தஞ்சமடைந்து, உணவு தண்ணீர் இல்லாமல் இரவைக் கழித்தனர். காலையில் கழகத்தினருடன் வந்த மதுராந்தகம் ஆறுமுகம், அலறித் துடித்து, கலைஞரை மீட்டு அழைத்துச் சென்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 149




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131